# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

**අති විශෙෂ**

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

**අංක 2353/57 - 2023 ඔක්තෝබර් මස 13 වැනි සිකුරාදා - 2023.10.13**

2353/57 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 13 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

எனது இல.: DEV/LND/02/ACQUI/09-2(3).
காணி அமைச்சின் தொடர்பு இல.: 4-3/14/2021/FH/ 20.

காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தலில் 2023.05.19 ஆந் திகதிய 2332/35 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட, பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்த்துள்ள காணியின் விபரத்தின் கீழ் தென் மாகாணத்தின், மாத்தறை மாவட்டத்தில் தெவிநுவர பிரதேச செயலாளர் பிரிவில் கந்தர மத்திய கிராம அலுவலர் பிரிவில் மாத்தறை சிரேஷ்ட நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 820308 ஆம் இலக்க விபர வரைபட இல. 820310 ஆம் இலக்க விபர வரைபடமாக திருத்தப்பட வேண்டுமென இத்தால் அறிவிக்கின்றேன்.

பிரதேச செயலாளர்/
காணி எடுத்தல் உத்தியோகத்தர்,
தெவிநுவர.

பிரதேச செயலகம்,
தெவிநுவர,
2023, ஒற்றோபர் 11.

EOG 10 - 0161

---

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

குறிப்பு இல.: 3/3/6/2/22.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/4/2010/D/308.

இலங்கை தரைப்படையின் 8ஆவது கஜபா அணி நிறுவுவதற்காக வேண்டியதான கீழ்க்காணும் காணியை



*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மத்திய மாகாணம், மாத்தளை மாவட்டம், உக்குவெல பிரதேச செயலாளர் பிரிவு, ஹலனகொட கிராம அலுவலர் பிரிவில் உள்ள பன்சலதென்ன கிராமத்தில் அமைந்துள்ள மாத்தளை மாவட்ட நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட கடத்திரல் வரைபட இல. 310507 கொண்டதுமான 6.3048 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய காணித்துண்டின் விபரங்கள் பின்வருமாறு :

01. **துண்டு இல. 03**
உரிமை கோருவோர்: இலங்கை அரச பெருந்தோட்ட யாக்கம்; விஸ்தீரணம்: 6.3048 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2023 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 27 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு உக்குவெல பிரதேச செயலகத்தில் என் முன்னிலையில் வெளிப்படுத்தும் படியும்,

மேலும் அக் காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நட்டஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2023 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 19 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

எஸ். என். கே. சேரசிங்ஹ,
பிரதேச செயலாளர்,
உக்குவெல.

பிரதேச செயலகம்,
உக்குவெல.
2023, செத்தெம்பர் 27.

EOG 10 - 0162